1997 மார்ச் 17]

230--

மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம்

3440--*திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மொரப்பூரில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 9-55

திருமதி ஏ.ஆர். வேடம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பாலில் மூன்றில் ஒரு பங்கு அரூர், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி போன்ற ஒன்றியங்களிலேதான் உற்பத்தியாகின்றது. இந்நிலையில் போக்குவரத்துச் செலவு குறைவதோடு, மொரப்பூரிலிருந்து சென்னைக்குக் குளிரூட்டப்பட்ட பாலைக் கொண்டு செல்ல ரயில் வசதி உள்ளதால், 1989-90 ஆம் ஆண்டிலேயே நமது முதல்வர் அவர்களால் மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் ஆரம்பிக்க அறிவிக்கப்பட்டது. பின்னர் வந்த ஆட்சியில் இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. எனவே, புதியதாக பொறுப்பேற்றுள்ள நமது ஆட்சியில் இவ்வாண்டே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தேசிய பால் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடம் நிதியுதவி கேட்கப்பட்டுள்ளது. நிதியுதவி கிடைக்கப்பெற்றவுடன் மொரப்பூரில் புதிய பால் குளிரூட்டும் நிலையத்தைக் கண்டிப்பாக அமைக்க அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதி சங்கரண்டாம்பாளையம் குளிரூட்டும் நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களின் வேலை, நிரந்தரம் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். இவர்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே வேலை புரிந்து வருகிறார்கள்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து இணையங்களிலும் இந்தக் கோரிக்கை வந்துள்ளது. மாண்புமிகு முதல்வர் கலைஞருடன் கலந்து பேசி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. பன்னீர்செல்வம்.

திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க என்ன தகுதி வேண்டும், எந்த அடிப்படையில் அமைக்கப்படுகிறது என்பதை அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க முக்கியமாகத் தண்ணீர் வசதி வேண்டும். மேலும் இடவசதி 3 ஏக்கர் இருந்தால் போதும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) குறைந்தது 10 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தித் திறனாவது அங்கேயிருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ.ஆர். வேடம்மாள்.

திருமதி ஏ.ஆர். வேடம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க எவ்வளவு நிதி தேவைப்படுகிறது? எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூரில் அந்தத் திட்டத்திற்கு சுமார் ஒரு கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அந்த நிதியுதவி கிடைத்தவுடன் கண்டிப்பாக அந்தப் பால் குளிரூட்டும் நிலையம் ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 231, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.